P.Kamanathan.

# தெய்வீகத் தோட்டத்தில் இருந்து சில மலர்கள்....



பகவான் பாபாவின்
திருமலர்ப் பாதங்களுக்கு
முதலாண்டு நிறைவு
சமர்ப்பணம்

பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா மண்டலி
கோண்டாவில்
29 - 03 - 1992

# தெய்வீகத் தோட்டத்தில் இருந்து சில மலர்கள்....



பகவான் பாபாவின்

திருமலர்ப் பாதங்களுக்கு

முதலாண்டு நிறைவு

சமர்ப்பணம்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா மண்டலி

கோண்டாவில்

29 - 03 - 1992

Om Sai Ram

**SRI SATHYA SAI ORGANISATIONS**
**CENTRAL CO - ORDINATOR**
REGION - 10
SRI LANKA

ஓம் சாயிராம்

கோண்டாவில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா மண்டலி 29-03-1991 இல் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருஷம் ஓராண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடுகிறது. பஜனை நகரசங்கீர்த்தனம், விசேஷ நிகழ்ச்சிகள், பிள்ளைகளுக்கு மனித மேம்பாட்டுக்கல்வி வகுப்புகள், நாராயண சேவை போன்ற நற்கருமங்களைச் சிறப்பாகச் செய்து கிராம மக்களின் கவனத்தை பகவானின் சர்வதர்ம போதனைகளில் ஈடுபடச் செய்வதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது. மண்டலியை நடத்துபவர்களின் தொண்டு பாராட்டுதற்கு உரியது.

முதல் ஆண்டு பூர்த்தி விழாவின் ஓர் அம்சமாக இந்த தொகுப்பு நூலை வெளியிடுகிறார்கள். தொகுக்கப்பட்ட பகவானின் செய்திகள் அநேகமாக சனாதனசாரதி போன்ற சஞ்சிகைகளிலிருந்தே எடுக்கப்பட்டவை. அன்பளிப்பாகத் தரப்படும் இந்த சிறிய நூலை வாசிப்பவர்கள் பயன் அடைவார்கள்

ஜெய் சாயிராம்

செ. சிவஞானம்
மத்திய அமைப்பாளர்
இலங்கை.

# "ஓங்காரம்"

ஓங்காரம் பிந்து சம்யுக்தம்
நித்யம் த்யாயந்தி யோகின,
காமதம் மோக்ஷதம் சைவ,
ஓங்காராய நமோ நம!

பிரம்மம் என்ற இலக்ஷியத்தை குறிவைத்து மனது என்ற பாணத்தால் அடிக்கவேண்டும். இலக்ஷியத்தை நன்ருக குறிவைத்து, உபநிஷத்துக்களின் போதனைகளை வில்லாக்கி, நன்றாக இழுத்து பாணத்தை விடு; பிரம்மத்தை அடைந்து அதனை வெற்றிகொள்! அதாவது "ஓம்" என்ற பிரணவமே இங்கு அம்பு! பிரம்மமே இலக்ஷியம்.

(பாபா - உபநிஷத வாஹினி பக். 33)

"கீதையின் இறுதி சுலோகத்தில் "யத்ர யோகேஸ்வர ஹ்ற கிருஷ்ணா யத்ர பார்த்தோதனுர் தாஹ தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர் மதிர்மம" என்று கூறப்படுகிறது.

எங்கு பரம யோகேஸ்வரனான பகவான் கிருஷ்ணன் உள்ளாரோ, எங்கு அர்ஜுனன் தனது வில்லுடன் உள்ளானோ. அங்கு வாய்மையும், நீதியுக் தவறாமல் வெற்றி பெறும்" என்பதே இதன்பொருள். மகாபாரதத்தில் காணப்படும் அர்ஜுனன் மட்டுமே இங்கு குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொருவரும் அர்ஜுனனாக இருந்து வெற்றியைப் பெறலாம். "வில்" என்பது நம்பிக்கைக்கும் தைரியத்திற்கும் மட்டுமின்றி நெஞ்சுறுதியுடன் எவ்வித எதிரியையும் கண்டு தளராது போராடும் தீவிர செயலாற்றுதலுக்கும் சின்னமாக விளங்குகிறது. அர்ஜுனன் என்றால் வெண்மை, தூய்மை, மாசற்ற தன்மை என்றே பொருள்படும். இந்த தூய்மையான மனோபாவத்துடன் வில்லை ஏந்தி உபநிடதங்கள் குறிப்பிட்டபடி "ஓம்" என்ற பிரணவத்தை அம்பாகத் தொடுத்து தெய்வத்தை நோக்கி எய்தால் எங்கும் எப்போதும் நீக்கமற நிறைந்திருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் உடனே காட்சி கொடுப்பார். அவரை அழைக்கவோ அமரச்செய்யவோ தேவையில்லை. உங்கள் இதயத்தில் இருந்து அவரே உங்களுக்கு குரல் கொடுப்பார்.

பாபா "சின்னக்கதாவிலிருந்து — (த. ச. சா. செப். 83)

# திருக்கோவில் ஒன்று....

திருக்கோவி லொன்று தெரிகின்றது — பார்த்திபன்
தேவனின் குரல்நின்று தொனிக்கின்றது!
உருக்கொண்டு திருவுலா வருகின்றது — உலகை
ஒருகுடையி லமர்த்திடவே துடிக்கின்றது!

சிவசக்தி சொரூபமாய் நடக்கின்றது — என்றும்
செங்கமலத் திருவாய் சிரிக்கின்றது!
அவதார மெடுத்திங்கு வந்திட்டது – எம்
அவலத்தைப் போக்கிடவே அழைக்கின்றது!

நாமமெனும் மணியோசை கேட்கின்றது — அங்கு
நாதமெனும் மழையே பெய்கின்றது!
ஓமெனும் ஒலியே ஒலிக்கின்றது — உள்ளம்
உணர்ச்சியா லொடுங்கி ஒளிர்கின்றது!

சாந்திக் கொடிமேலே பறக்கின்றது — அதில்
சர்வமதச் சின்னங்களுந் தெரிகின்றது!
வேந்தனின் ஆட்சியும் நடக்கின்றது — வேத
விற்பன்னர் கூட்டமுங் குவிகின்றது!

பிருந்தா வனத்தையே ஆக்கிட்டது — அங்கு
பெருமானைப் மீண்டுமே உலவிட்டது!
பொருந்தா வினைகளையே போக்கிட்டது — என்றும்
போதினில் எதிரினிலே எழுந்திட்டது!

பிணிதீர்க்கும் அருமருந்தைக் கொடுக்கின்றது — பெரும்
பேறும் பதவிகளைத் தருகின்றது!
தணியாத தாகமதைத் தணிக்கின்றது — எம்
தவநிலைக் கேற்பவருள் பொழிகின்றது!

நிழலுக்குத் தெரியாததைக் கூறுகின்றது — எம்
நெஞ்சக் கனகல்லை உருக்குகின்றது!
விழலுக்குப் பாயும்நீரைத் தடுக்கின்றது — வெகு
விரைவினில் வேண்டுவரந் தருகின்றது!

ஆராய்ச்சி மணியடிப்ப தேனென்றது — வீண்
அபவாதங் களுமிங்கே ஆகாதென்றது!
போராட்சி புரிந்திடவே வந்ததென்றது — தன்
பேரருளால் வையத்தையே காக்கின்றது!

போதனை செய்யவே புறப்பட்டது — உயர்
போதனை சாலைகளையே நிறுவிட்டது!
சாதனை செய்திடவே அழைக்கின்றது — சத்ய
சாயிநாதன் சகலமுமே பாரென்றது

**டாக்டர் அ. கணேசான்**
*சாயி கீதம் பக்கம் 123*

---

# தேர்த்திருவிழா . . . .

ஆலய விழாவாகத் தேர் இழுப்பதை நாம் நமது உடம்மை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். தேரில் இருப்பதுபோல நமக்குள்ளும் இறைவனின் பிம்பம் இருக்கிறது. தேரை இழுப்பதுபோல ஆசாபாசங்கள் நம்மையும் இழுக்கின்றன. தேருக்கு முன்னால் செல்லும் இசையும் நாட்டியமும்போல நமதுவாழ்க்கையிலும் பல்வேறு குடும்பப் பண்டிகைகளும் விழாக்களும் நடைபெறுகின்றன. ஊர்வலம் முடிந்ததும் சுவாமி திரும்ப ஆலயத்துக்குள் போய்விடுகிறார். வாழ்க்கை முடிந்ததும் நமது ஆத்மாவும் அதுவரை வாழ்ந்த உடலை விட்டுவிட்டு இறைவனிடம் திரும்பிவிடுகிறது.

— பகவான் பாபா
(ஞானபூமி ஜன. 82 பக்கம் 12)

# முக்தியைப் பெற

### பாபா சொன்ன சின்னக் கதை

"உங்களை நம்பி வழிபடுகிறவர்களை நீங்கள் காப்பாற்றுகிறீர்கள். கயிலைமலைக்கு வந்து யாத்திரையை முடிப்பவர்களுக்குப் புண்ணிய கதி கிடைக்கிறது. காசிக்கு வந்து கங்கையில் நீராடி, விசுவேசுவரரைத் தரிசனம் செய்பவர்களுக்கு நற்கதி கிடைக்கிறது. ஆனால் இப்படி ஏதும் செய்யமுடியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். வாழ்க்கையை நல்லவிதமாக அமைத்துக்கொள்ள முடியாதவர்களும் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய கதி என்ன? என்று கேட்டாள் பார்வதி.

"உனக்குத் தெரியவேண்டுமா? என்னுடன் வா" என்று காசியை நோக்கிப் புறப்பட்டார் சிவபெருமான். பார்வதிதேவி எண்பதுவயதுக் கிழவியாகவும், சிவபெருமான் தொண்ணூறு வயதுக் கிழவராகவும் உருவம் தரித்துக்கொண்டார்கள். காசி விசுவநாதர் ஆலயத்துக்கு முன் குறுகலான சந்தில் இருவரும் போய் நின்று கொண்டார்கள்.

கிழவருக்கு மூச்சுவாங்கத் தொடங்கிற்று. மனைவியின் மடியில் தலையை வைத்துக்கொண்டார். கிழவி போவோர் வருவோர் அனைவரையும் பார்த்துப் புலம்பத் தொடங்கினாள்.... 'ஐயா! என் கணவருக்கு உயிர்பிரியும் தருணம் வந்துவிட்டது. யாராவது கொஞ்சம் கங்கைநீரை வாயில் விடுங்களேன். என்னால் அவரை விட்டுவிட்டு எழுந்துபோய்க் கங்கைநீரைக் கொண்டுவர முடியவில்லையே? என்று கூறி அழுதாள். ஆனால் யாருமே உதவ முன்வரவில்லை. எல்லோருக்கும் கங்கையில் நீராடுவதும், காசி விசுவேசுவரரைத் தரிசிப்பதும், தங்களுக்கென்று புண்ணியம் தேடிக்கொள்வதுமே முக்கியமாகத் தோன்றிற்று. கையில் செம்பில் கங்கை நீரை ஏந்திவந்தவர்கள், அதைக் கிழவரின் வாயில் ஊற்றி வீணாக்க விரும்பவில்லை,

இருட்டு நேரமாகிவிட்டது. போவோர் வருவோர் குறைந்துவிட்டனர். அந்தவழியாகக் கடைசியில் ஒரு திருடன் வந்தான் அவன்கையில் ஒரு சிறுசெம்பில் கங்கைநீர் இருந்தது. கிழவியைக் கண்டதும் அவனுடைய மனம் இரக்கத்தால் நிறைந்தது. மற்றவர்கள் பார்த்து அடையாளம் கண்டுகொண்டால், தன்னைப் பிடித்துக்

கொண்டுபோய்விடுவார்களே என்பதையும் மறந்து, கீழே மண்டியிட்டு உட்கார்ந்து, கிழவரின் வாயில் கங்கைநீரை ஊற்றப்போனான்.

"ஐயா! கொஞ்சம் நில்லும், நீர் கொஞ்சம் கங்கைநீர் ஊற்றியதும் கிழவரின் உயிர் பிரிந்துவிடும். அதற்குள் நீர் வாழ்க்கையில் செய்த நல்லகாரியம் ஏதேனும் நினைவுக்கு வந்தால், அதை எண்ணிப்பார்த்துக்கொண்டு கிழவரின் வாயில் கங்கைநீரை விடும்!" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள் கிழவி. திருடனால் எவ்வளவோ முயன்றும் தான்செய்த ஒரு நல்லகாரியத்தையாவது நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. அப்படி எதையாவது அவன் செய்திருந்தால்தானே? அதேசமயம் பொய் சொல்லவும் அவனுடைய மனம் துணியவில்லை.

அந்தக் கிழவரைப் பார்த்து, அம்மா! நான் இதுவரை நல்லகாரியம் எதையுமே செய்ததில்லை. என்னுடைய தீயசெயல்கள் நிறைந்த வாழ்க்கையில், முதல்தடவையாக இப்போதுதான் ஒரு நல்லகாரியம் செய்யப்போகிறேன். எனக்கு இதற்காக ஏதாவது நற்பலன் கிடைத்தாலும்சரி, கிடைக்காவிட்டாலும் நான் வருத்தப்படமாட்டேன்! என்று சொல்லிக்கொண்டே கிழவரின் வாயில் கங்கைநீரை ஊற்றினான்,

கிழவி மறைந்துபோனாள். கிழவரும் மறைந்துபோனார். ஈசன் உமையவள் சமேதராக அவனுக்குத் தரிஸனம்கொடுத்தார். அன்பனே! உனக்கு முக்தியை அருளுகிறேன். உனக்கு 'அளிக்காமல்' வேறு யாருக்கு அளிக்கமுடியும்? உன்மனதில் இரக்கம் இருக்கிறது கையில் கங்கை நீர் இருக்கிறது வாக்கில் சத்தியம் இருக்கிறது. இதைவிட முக்தியைப்பெற வேறு என்ன தகுதிவேண்டும்? என்று கூறிவிட்டு மறைந்துபோனார் ஈசன்.

பார்வதிக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

வாழ்க்கையில் இதுவரை நல்லகாரியங்கள் செய்யாமலே இருந்துவிட்டாலும் பரவாயில்லை. இனியாகிலும் செய்யமுற்படுங்கள். அது உங்களுக்கு நல்ல கதியைக் கொடுக்கும்.

(ஞானபூமி, ஜனவரி 82, பக்கம் 21)

# பகவானும் அவரது குழந்தையும்

இவ்வாண்டு ஈசுவரம்மா தினத்தன்று (மே மாதம் 6ம் திகதி) த்ரயீ பிருந்தாவனத்தில் கூடியிருந்தவர்களுக்கு அந்த நாளை வாழ்நாளில் மறக்கமுடியாத நாளாக பகவான் வியத்தகு முறையில் செய்து அருள்புரிந்தார். எல்லோரும் பகவானின் அருளுரையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தபோது பகவான் ஒரு ஒன்பது வயதே ஆகிய சிறுவனை அழைத்து அவனோடு ஒரு உரையாடல் நிகழ்ச்சியை நடத்தி அதை அனைவருக்கும் படிப்பினையாக விளங்கச்செய்தார். பகவானின் கேள்விகளும் அவைகளுக்கு அந்தச் சிறுவன் சற்றும் தயக்கமின்றி அளித்த ஆழ்ந்த அறிவுபூர்வமான பதில்களும் பகவானைச் சந்தோசப்படுத்தியதுடன் கூட்டத்தில் குழுமியிருந்த அனைவரையும் திகைக்க வைத்தது. இதைத் தற்செயலாக ஒலிநாடாவில் ஒரு பக்தர் பதிவு செய்ததால் அந்தக் கேள்வி - பதில் நிகழ்ச்சியை முழுமையாக அளிப்பது சாத்தியமாயிற்று. அந்த அபூர்வமான கேள்வி - பதில் விபரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

சுவாமி : உன் பெயரென்ன?
சிறுவன் : சாயி கிரிதர்.
சுவாமி : வயது?
கிரிதர் : 9 ( ஒன்பது )
சுவாமி : உனக்கு எப்படித் தெரியும்?
கிரிதர் : சுவாமி, நீங்கள்தான் கூறியுள்ளீர்கள்.
சுவாமி : நான் கூறவில்லையே!
கிரிதர் : நீங்கள்தான் எனக்குப் பிறவியைத்தந்தீர்கள் நீங்களே எனது தாயும், தந்தையும், எல்லாமும் நீங்களே கூறியது தான் இது.
சுவாமி : உனக்கு சகோதர சகோதரிகள் எத்தனை பேர்?
கிரிதர் : எல்லோருமே எனது சகோதர சகோதரிகளே
சுவாமி : அப்படிச் சொல்வது சரியாகுமா?
கிரிதர் : சுவாமி, நீங்களே எல்லோருக்கும் தாய். ஆகவே நாங்கள் யாவரும் சகோதர சகோதரிகள் தானே!
சுவாமி : நல்ல பையன் நீ! எங்கிருந்து வருகிறாய்?
கிரிதர் : உங்களிடமிருந்தே வந்துள்ளேன், சுவாமி!
சுவாமி : ஓ! என்னிடமிருந்தா?
கிரிதர் : ஆம், சுவாமி! இந்த உலகம் முழுவதுமே உங்களிடமிருந்து வந்ததே!

சுவாமி : உலகைப்பற்றி உனக்கு எப்படித்தெரியும்?

கிரிதர் : நீங்கள்தான் சுவாமி இவையெல்லாம் எனக்கு போதித்துள்ளீர்கள்.

சுவாமி : இதற்குமுன் உன்னுடன் நான் பேசியதேயில்லையே!

கிரிதர் : ஆம் சுவாமி! நீங்கள்தான் என் குரு. இந்த உலகோர்க்கெல்லாமே ஒரே குரு நீங்கள்தான்!

சுவாமி : சரி இப்போது எங்கே தங்கி இருக்கிறாய்?

கிரிதர் : உங்கள் இதயத்தினுள்ளே உள்ளேன் சுவாமி!

சுவாமி : உனது சரீரம் வேறு: என் சரீரம் வேறு. அது எப்படி சாத்தியமாகும்?

கிரிதர் : இல்லை, சுவாமி, என் சரீரமும் உங்கள் சரீரத்திலிருந்து வந்ததே!

சுவாமி : அது உனக்கு எப்படித்தெரியும்?

கிரிதர் : ஆம் சுவாமி! இந்த உலகம் முழுவதுமே உங்களிடம் இருந்து வந்ததே. நீங்களே பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் எல்லாம்!

சுவாமி : நீ பிரம்மாவைப் பார்த்திருக்கிறாயா?

கிரிதர் : ஆம் சுவாமி! நீங்கள்தான் பிரம்மா!

சுவாமி : பிரம்மாவின் உருவம் எப்படி இருக்கும்?

கிரிதர் : பிரம்மாவிற்கு தாமரைப்பூ சங்கு சக்கரத்துடன் கூடிய நான்கு கரங்கள் உண்டு.

சுவாமி : எனக்கு அப்படி ஒன்றுமில்லையே! சரியாகப் பார்!

கிரிதர் : ஆம் சுவாமி! உங்களிடம் எல்லாம் உள்ளன.

சுவாமி : அது எப்படிச் சொல்கிறாய்?

கிரிதர் : பிரம்மாவின் தோற்றத்தை நீங்களே எனக்குக் காட்டியுள்ளீர்கள்.

சுவாமி : எப்பொழுது?

கிரிதர் : எனது கனவில் நீங்கள் எல்லாக்கடவுள் 'உருவங்களையும் காட்டியுள்ளீர்கள். எல்லாக் கடவுளர் உருவங்களும் உங்களிடமிருந்து வருபவையே.

சுவாமி : (மற்ற மாணவர்களை நோக்கி) இச்சிறுவன் இன்னொரு ஹனுமந்தப்பாதான்! (பெங்களூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ஹனுமந்தப்பா இம்மாதிரி கனவுக் காட்சிகளைத் தாம் கண்டதாக அடிக்கடி கூறுவதைச் சுட்டிக்காட்டும் 'வகையில் குறிப்பிடுகிறார். (சிரிப்பு)

சுவாமி ; சரி, உனக்கு என்ன வேண்டும்? கேள்

கிரிதர் : எனக்கு நீங்கள்தான் வேண்டும், சுவாமி!

சுவாமி : இல்லை, இல்லை, ஏதாவது பொருளைக் கேள் பேனா பென்சில், சாக்லெட், கைக்கடியாரம் ஏதாவது கேள்!

கிரிதர் : இல்லை சுவாமி! எனக்கு வேறு எதுவும் வேண்டாம். நீங்கள் தான் வேண்டும்.

சுவாமி : நீ ஜெபம், தியானம் ஏதாவது செய்வதுண்டா?

கிரிதர் : ஆம் சுவாமி! நான் 108 தெய்வ நாமங்கள் ஜபிப்பதுண்டு.

சுவாமி : சரி, அவைகளை எடுத்துச் சொல்.

கிரிதர் : ஓம் ஸ்ரீ பகவான் சத்ய சாயி பாபாய நம:! அடுத்து இதே பெயரை 108 தடவைச் சொல்வேன் (சிரிப்பு)

சுவாமி ; ஏதாவது பிரார்த்தனை கீதங்கள் பாடுவதுண்டா?

கிரிதர் : ஆம், சுவாமி, காலையில் எழுந்ததும் " கராக்ரே வஸதே லட்சுமி " நடுப்பகலில் உணவருந்துமுன் " பிரம் மார்ப்பணம் " சொல்வதுண்டு.

சுவாமி : இவைகளுக்கு அர்த்தம் தெரியுமா?

கிரிதர் : ஆம், சுவாமி! பிரம்மார்ப்பணம் என்பதால், நான் உண்ணும் உணவை பிரம்மாவிற்கு அர்ப்பணம் செய்கிறேன். என்றே கருத்து.

சுவாமி : பிரம்மா யார்?

கிரிதர் : நீங்களே தான் பிரம்மா! எல்லாவற்றையும் உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன்.

சுவாமி : ராமன், கிருஷ்ணன் போன்ற மற்றத் தெய்வங்களை உனக்குப் பிடிக்குமா?

கிரிதர் : நீங்கள் அருகிலிருக்கும்போது, நான் ஏன் வேறு தெய் வங்களை விரும்பவேண்டும்? நீங்களே ராமன், கிருஷ்ணன் மற்றும் எல்லாம்.

சுவாமி ; நீ தியானம் செய்வதுண்டா?

கிரிதர் : ஆம், சுவாமி.

சுவாமி : எப்படி?

கிரிதர் : பத்மாசனத்தில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு செய்வேன்.

சுவாமி ; அப்போது என்ன பார்ப்பாய்?

கிரிதர் : நான் உங்களைத்தான் பார்க்கிறேன் சுவாமி!

சுவாமி : எவ்வளவு நேரம் தியானம் செய்வாய்?

கிரிதர் , எனக்குத் தெரியாது நான் கடிகாரம் வைத்திருக்கவில்லை

சுவாமி : உனக்கு கடிகாரம் வேண்டுமா?

கிரிதர் : கடிகாரம் வேண்டாம் சுவாமி! நீங்கள் தான் வேண்டும்!

சுவாமி ; ஏதாவது பொதுப் பிரார்த்தனை உனக்குத்தெரியுமா?

கிரிதர் : ஆம் சுவாமி! லோகாஸ் — ஸமஸ்தாஸ் சுகினோபவந்து.

சுவாமி : வேறு ஏதாவது பிரார்த்தனை?

கிரிதர் : ஆம், சுவாமி! " ஏ தெய்வமே! எனது இதயத்தை எடுத்துக்கொள் "

சுவாமி : ஏதாவது பாடல் தெரியுமா?
கிரிதர் ; தெரியாது சுவாமி — பஜனைப் பாடல்தான் தெரியும்.
சுவாமி : பாடு
கிரிதர் : "கோவிந்த போலோ கோபால போலோ"
( முழுப்பாடலையும் பாடுகிறான் )
சுவாமி : நீ T. V. வீடியோ பார்ப்பதுண்டா?
கிரிதர் : இல்லை, சுவாமி, குழந்தைகளுக்கான கார்ட்டூன் படங்கள் மட்டும் பார்ப்பதுண்டு
சுவாமி : கார்ட்டூன் தெய்வமல்லவே!
கிரிதர் ; ஆம், சுவாமி, எல்லாமே கடவுள்தான். நீங்களோ கடவுள்
சுவாமி : ஆனால் நான் கார்ட்டூனல்லவே! பார்! ( சிரிப்பு )
கிரிதர் : ஆம் சுவாமி! எல்லாமே நீங்கள்தான்!
சுவாமி : நல்ல பையன் நீ; மற்றப் பிள்ளைகளுடன் சண்டை போடுவதோ அவர்களைப்பற்றி பொறாமைப்படுவதோ உண்டா?
கிரிதர் : இல்லை, சுவாமி! நீங்கள் ஒவ்வொருவரிலும் உள்ளீர்கள் அப்படியிருக்க நான் எப்படி இன்னொருவர் மீது பொறாமைப்பட முடியும்.
சுவாமி : இல்லை, இல்லை, பள்ளியில் மற்றப் பிள்ளைகள் உன்னுடன் சண்டை போடலாம். உன்மீது பொறாமைப் படலாமல்லவா?
கிரிதர் : இல்லை, சுவாமி! நீங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும்போது அவர்கள் எப்படிச் சண்டையிட முடியும்? எல்லோரையும் நேசிக்கவேண்டுமென நீங்களே போதித்துள்ளீர்கள்.
சுவாமி : இங்கே உள்ள சுயநலக்காரர்களான மூத்த பையன்களைப் பார்!
கிரிதர் : இல்லை! சுவாமி அவர்கள் யாவரும் நல்லவர்களே! அவர்களுக்குள்ளும் நீங்களே உள்ளீர்கள்.
சுவாமி : ஆனால் உலகில் நல்லவைகளும் தீயவைகளும் உள்ளனவே!
கிரிதர் : இல்லை, சுவாமி! எல்லாமே நல்லதுதான் உலகமே நல்லதுதான் : ஏனென்றால் நீங்கள் எல்லாவற்றிலும் உள்ளீர்கள்.
சுவாமி : ( தனது கரத்தைக் காட்டி ) இது என்ன?
கிரிதர் : இதில் எல்லாமே அடங்கியுள்ளது.
சுவாமி : இது வெறுங்கை தானே?
கிரிதர் : இல்லை சுவாமி! எல்லா சக்தியும் அதில் உள்ளது. நீங்களே எல்லையற்ற சக்தி!
சுவாமி: உனக்கு எப்படித் தெரியும்?

கிரிதர் : உலகம் முழுவதும் உங்கள் கையில்இருப்பதாக நீங்களே கூறியுள்ளீர்களே!

சுவாமி : நன்று! நல்ல பையன் நீ! இந்தா! இப்போது இந்த நூறு ரூபாய் நோட்டை வாங்கிக்கொண்டு உன்சட்டைப் பையில் பத்திரமாகப் போட்டுவை வெளியே ஜேப்படிக் காரர்கள் அதிகம் உள்ளனர். உஷாராக இரு!

கிரிதர் : இல்லை சுவாமி! அவர்களுக்குள்ளே கூட நீங்கள் உள்ளீர்கள், நீங்கள்தான் என்னைத் தொடமுடியும். நீங்கள் கொடுத்ததை வேறு எவரும் எடுத்துவிட முடியாது!

சுவாமி : நன்று! உனது பரீட்சை முடிவுகள் எப்போது வரும்?

கிரிதர் : எனக்குத் தெரியாது சுவாமி!

சுவாமி : முதல் வகுப்பில் பாஸ் செய்து விடுவாயா?

கிரிதர் : ஆம் சுவாமி!

சுவாமி : எப்படித் தெரியும்?

கிரிதர் : இப்போது தாங்களே தங்கள் வாயால் 'First Class' முதல் வகுப்புத் தேர்வு என்று கூறிவிட்டீர்கள். உங்கள் தெய்விக வாக்கிலிருந்து வருவது சத்தியமே ஆகும். ஆகவே கட்டாயமாய் நான் முதல் வகுப்பில் பாஸ் செய்வேன்!

சுவாமி : ஏதாவது புத்தகங்கள் படித்துள்ளாயா?

கிரிதர் : இல்லை சுவாமி! உங்கள் அருளுரைகளைத்தான் கேட்டுள்ளேன். உலகின் அறிவு யாவும் சுவாமியே!

சுவாமி : (அனைவரையும் நோக்கி) இந்தப் பையன் அத்வைத பாவத்தில் ஊன்றியுள்ளான். இவன் மற்றொரு பிரகலாதனனே! பிரகலாதன்கூட இவ்வளவு தெளிவாகவும் துணிவாகவும் பேசியிருக்கமாட்டான். நல்லது! மிகவும் சந்தோஷம்!

(இந்த ஒலிநாடாவை அனுப்பி வைத்த ஹரீஷ் தாகூர் என்பவர் "இந்த தெய்விக உரையாடல் பகவான் ஏற்பாடு செய்த ஒரு தெய்விக நாடகமே என்று நான் கருதுகிறேன். சாயி கிருஷ்ணனுக்கும் சாயி கிரிதருக்கும் இடையே இந்த உரையாடலை நிகழச் செய்வித்து சாயிசங்கல்பத்தினால் நுணுக்கமான புனிதமான மாறுதலை குழந்தைகளுக்கிடையே தனது கல்வித்திட்டம் மூலம் உருவாக்கி வருவதை எடுத்துக் காட்டுவதாகவும், வரவிருக்கும் சாயி சகாப்தத்தில் புதியதொரு உலக சமுதாய நீதியை உருவாக்கி நன்னெறி நிலவும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதை இதன் மூலம் பகவான் விளக்குவதாகவும் கருத வேண்டும்")

ச. ச. சா. அக்டோபர் 91

# ஆத்ம தர்மம்

உத்தமமான எண்ணங்களை வளர்த்து, உத்தமமான சொற்களே பேசி உத்தமமான செய்கைகளில் ஈடுபட்டு இலட்சிய வாழ்க்கை வாழவேண்டும். வாழ்க்கை குணத்தைப் பொறுத்தே அமையும். மனிதன் ஆத்ம தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமேயன்றி சரீர தர்மத்தைக் கடைப்பிடிக்கலாகாது. இந்திரீய தர்மம் மிருக தர்மம். மனிதன் பின்பற்றவேண்டியது தெய்வத்துவமே. பிரகிருதி ஈஸ்வர ஸ்வரூபம். ஆகவே ஈஸ்வர பாவத்தையே மனிதர்கள் கொள்ளவேண்டும். படைப்பே தெய்வ சக்தியின் வடிவம். இதன் பெயரே பிரகிருதி. இங்கே பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் தெய்வசக்தி உள்ளது. மனிதன் தன்னுள் உள்ள தெய்வத்துவத்தை வெளிக்காட்டவே பிறப்பு எடுக்கிறான். மனிதப் பிறவி புனிதமானது. வாழத்தக்கது இலட்சியத்தை அடைய உதவக் கூடியது. படைப்பில் தெய்வத்துவமும் பிரகிருதியும் வெவ்வேறல்ல. மனிதத்துவமே தெய்வத்துவம் என்பதை உணர்த்த உலகில் அவதாரங்கள் தோன்றுகின்றன. தெய்வத்துவத்திலிருந்து தெய்வத்துவமே வெளிப்படும்.

திவ்யாத் மஸ்வரூபிகளே . . . . . . தெய்வத்துவம் தனியாக இல்லை, ஈஸ்வர, சர்வபூதானாம், ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம், என்றபடி ஈஸ்வரன் எங்கும் நிறைந்துள்ளான். எல்லாமே ஈஸ்வரத்துவம் தான். இப்படிப்பட்ட அருமையான, மேன்மையான, தெய்வத்துவமான மனிதவாழ்வை புலனிச்சையில் ஈடுபட்டு உலக சுகங்களில் வீணடித்துக்கொண்டிருக்கின்றார்கள். மனிதர்கள். ஆன்மிகமென்பது உலக வாழ்க்கையிலிருந்து வேறுபட்டதெனக் கருதுவது சரியல்ல. பௌதிக லௌகிக ஆஸ்திகஆகிய எல்லாவற்றிலும் ஆன்மிகம் அடிப்படையாக உள்ளது. இப்படிப்பட்ட திவ்யமான அடிப்படையை மறந்து, அசத்தியமான அழியக்கூடிய மாறுதலுக்குட்படக்கூடியவைகளை நம்பி வாழ்வது துரதிஷ்டவசமானது.

கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் மாறாமல் இருக்கும் ஆதாரசக்தி ஒன்று உள்ளது. இந்த ஆதாரமான தெய்வசக்தியை உணர்ந்தால்தான் ஆனந்தம்பெற இயலும். எந்தப்பாதையில் சென்றாலும் இந்த தெய்வீக அடிப்படையை மறக்காமல் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். ஆனால் இந்நாளைய மனிதர்கள் தனம், பதவி, அதிகாரம் போன்றவற்றில் நாட்டம்கொண்டு செயல்படுகின்றனரேயன்றி குணத்தில் நாட்டம்கொள்வதில்லை. குணமில்லாமல் அதிகாரம் செலுத்துவதோ, உயர்பதவி வகிப்பதோ பணம் சம்பாதிப்பதோ பயனில்லை. மனிதருக்கு முக்கியமான தகுதி குணமே. இதற்கு தெய்வத்துவத்தை உணர முயலவேண்டும். இயல்பை விட்டு விட்டால் வாழ்க்கை வீணாகிவிடும்.

— பாபா (த. ச. சா. டிசெ. 91 பக் 1)

## பகவான் பாபா 22-11-91 அன்று
## ஸ்ரீ சத்தியசாயி பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் வழங்கிய அருளுரையிலிருந்து
## ஒரு முத்து

மாணவர்களே, மாணவிகளே,

நம்மிடம் இருக்கவேண்டிய சிறப்பு அம்சம் 'சம்ஸ்காரம்' (Refinement) சீர்திருத்தமே அன்றி 'சம்சார' நாட்டம் அல்ல. வாழ்க்கையை நன்னுதாரணமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். சரியான முறையில் ஒழுக்கத்தை வகுத்துக்கொண்டு முன்னேற வேண்டும். இங்கு படித்துப் பட்டம்பெற்ற மாணவர்களும் மாணவிகளும் வெளி உலகில் சென்று நல்லொழுக்கத்தை வளர்த்து, அமைதியையும், நாட்டின் பல்வகை வளத்தையும் பெருக்கப்பாடுபட வேண்டும் என்பதே எனது ஆசையும் ஆசியும்.

நான்கு வரிகள் நான் கூறுவதை நீங்கள் முக்கியமாகக் கொண்டு வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும்.

| | | |
|---|---|---|
| Sow action | — | Reap a tendency |
| Sow a tendency | — | Reap a habit |
| Sow habit | — | Reap character |
| Sow character | — | Reap destiny |
| Sow destiny | — | You are makers of |
| Your Own destiny | — | You can do or undo it. |

Thanks.

செயலை விதைத்து, மனப்பாங்கை அறுவடை செய்......
மனப்பாங்கை விதைத்து, ஒரு வழக்கத்தை அறுவடை செய் .....
வழக்கத்தை விதைத்து, குணப்பண்பை அறுவடை செய் .....
குணப்பண்பை விதைத்து, விதியை அறுவடை செய்......
உன் விதியை உருவாக்குவது நீயே......
அதை ஆக்கவும் அழிக்கவும் உன்னால் முடியும்.
நன்றி.

— பாபா (த. ச. சா. நவம்பர் 91 பக்கம் (50)

## தியானத்தின் சிறப்பு ..............

தியானத்தினால் நீங்கள் மனிதகுல ஒற்றுமையையும் தெய்வத்தின் எல்லையற்ற சக்தி எங்கும் பரவியிருப்பதையும் உணர்வதுடன் அதிலேயே ஆழ்ந்து விடலாம். உங்களது அன்றாட வாழ்க்கை அனுபவத்தில் ஒரு பெரிய கவலை தோன்றியதும் அதுவரை உங்களைப்பற்றியிருந்த சிறிய கவலைகளை அது ஒடுக்கிவிடுவதை உணர்ந்திருப்பீர்கள். உங்கள் மனதில் தெய்வத்தைப்பற்றிய சிந்தனையே நிறைந்திருந்தால் தெய்வத்திற்காகவே நீங்கள் முழுமனதுடன் எப்போதும் இடைவிடாது ஏங்கிக்கொண்டிருந்தால் மற்ற அற்ப ஆசைகளும் சாதனைகளும் தோல்விகளும் கூட உங்களைப் பாதிக்க மாட்டா. அவையாவும் உங்கள் கவனத்திலிருந்து நீங்கிவிடும். தெய்வ சிந்தனை என்ற வெள்ளத்தில் மூழ்கி விரைவிலேயே தெய்வத்தை உணர்தல் எனும் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கும் நிலையை அடைவீர்கள்.

— பாபா (த. ச. சா. டிசம்பர் 91)

## நம்பிக்கை.......

" நம்பிக்கை உள்ள இடத்தில்தான் அன்பு குடிகொண்டிருக்கும்.

அன்பு உள்ள இடத்தில்தான் சத்தியம் இருக்கும்.

சத்தியம் உள்ள இடத்தில்தான் பேரானந்தம் நிலைத்திருக்கும்.

பேரானந்தம் உள்ள இடத்தில்தான் தெய்வம் இருக்கும் "

— பாபா (த. ச. சா. ஜூன் 89 - பக்கம் 12)

## போதனைகளைப் பின்பற்றுங்கள்...........

ஒரு சந்தர்ப்பத்தில் அனுமானும் விபீஷணனும் சிநேகிதர்களாக இருந்தபோது விபீஷணன் அனுமாரைப் பார்த்து '' அனுமானே நீ இராமனுடைய அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமாகி அவரிடம் மிக நெருங்கிய பக்தராக விளங்குகிறாய்! நான் அனுதினமும் எப்போதும் இராம சிந்தனையிலேயே ஈடுபட்டிருந்தும் இராமனின் அருள் ஏன் எனக்குக் கிடைக்கவில்லை?'' என்று கேட்டார் அதற்கு அனுமார் '' நீ எப்போதும் இராம நாம சிந்தனையில் ஈடுபட்டிருப்பினும் இராம காரியத்தில் ஈடுபடவில்லை. லோக மாதாவானவளும் இராமனின் தர்மபத்தினியுமான சீதையை உன் சகோதரரான இராவணன் அபகரித்துக்கொண்டு வந்துவிட்டானே! இப்படி அவன் செய்த அந்த பெரிய தீயச்செயலைக் கண்டித்து சீதாமாதாவிற்கு ஏற்பட்ட இந்த மாபெரும் துன்பத்தைத் துடைக்க நீ ஏதாவது செய்தாயா இல்லையே. இராமநாமத்தை ஜபித்துக்கொண்டிருந்தால் மட்டும்போதாது. அவருடையபணியிலும் பங்குகொண்டு செயலாற்ற வேண்டும் என்றார்.

கிருஷ்ணா, கிருஷ்ணா, என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது அதனாலேயே கிருஷ்ணனின் அருள் வந்து விடாது. பாபா பாபா என்று கூறிக்கொண்டிருந்தால் மட்டுமே பாபாவின் அருளைப் பெற்றுவிட முடியாது. பாபாவின் பணிகளில் எவ்வளவு தூரம் பங்கு கொள்ளுகிறீர்கள்? அவருடைய போதனைகளை எவ்வளவு பின்பற்றுகிறீர்கள்?

(ச. ச. சா. பெப் 90 பக்கம் 7

ஓம் சாயிராம்

## பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா மண்டலி
## கோண்டாவில்

# ஓராண்டு நிறைவுரை

## 29-03-1992

அன்பர்களே!

பகவான் திருவருளால், இப்பகுதி சாயி அன்பர்களினதும் ஸ்ரீசத்ய சாயி சேவா தாவடி நிலையத்தினதும் ஒத்துழைப்பு ஊக்குவிப்புடன், 29-03-1991ல் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர் திரு. S. சிவஞானம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இம்மண்டலி இன்று தனது முதலாண்டு நிறைவினை எய்துகின்றது.

இவ்வோராண்டு நிறைவில் இடம்பெற்ற வாராந்த வெள்ளிக்கிழமை (பி.ப. 4 மணி) பஜனை 'பகவானின் போதனைகளில் இருந்து' என்னும் சுற்றுவட்ட உரைநிகழ்ச்சிகளிலும், மற்றும் எல்லா விசேட சர்வமத பண்டிகை தினபிரார்த்தனை சிறப்பு நிகழ்ச்சிகளிலும், அதிகாலை (4 மணி) ஓங்கார சாதனை, நகர சங்கீர்த்தன நிகழ்ச்சிகளிலும், அகில உலக அகண்ட நாம நிகழ்ச்சியிலும் மற்றும் நாராயண சேவைகளிலும் இப்பகுதி அன்பர்கள் எம்மோடு ஆர்வத்தோடு இணைந்து பங்குகொண்டு வருகிறார்கள். இம்மண்டலியின் வளர்ச்சியில் ஆத்மீகத்துறை மனிதமேம்பாட்டு கல்வித்துறை அமைப்பாளராக திரு. செ. தங்கராசா அவர்கள் சேவையாற்றி வருகிறார்கள்.

ஆகஸ்ட் 91 முதல் பிள்ளைகளுக்கான மனிதமேம்பாட்டு கல்வி வகுப்புகள் (பாலவிஹாஸ்) ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் பி. ப. 3-15 மணிக்கு இடம்பெற்று வருகின்றது. இதன் வளர்ச்சியில் பாலவிஹாஸ் குருவான திருமதி மதிவதனி சரவணபவன் அவர்கள் சேவையாற்றி வருகிறார்கள். மேலும் அண்மையில் இடம்பெற்ற வடமாநிலத்திற்கான பாலவிஹாஸ் குரு பயிற்சியினைப் பெற்ற இம்மண்டலியினைச் சார்ந்த செல்விச. சசிகலா, செல்வி த. தயாளினி, செல்வி தி. அஜித்தா, செல்வி ஞா. வளர்மதி போன்றவர்கள் இவ்வகுப்புகளிலும், விசேட தின பாலவிஹாஸ் நிகழ்ச்சி அமைப்புகளிலும், வாராந்தம் புதன்கிழமைகளில் (பி. ப. 4 மணி) இடம்பெறும் பஜனைப் பயிற்சி வகுப்புக்

களிலும் இணைந்து சேவையாற்றி வருகிறார்கள். மற்றும் இம் மண்டலியின் வளர்ச்சியில் தீவிரப்பணியாளராக சேவையாற்றிவரும் அனைவரையும் நினைவு கூர்ந்து, பகவான் காட்டும் புனிதமான இறைவணக்கத்திலும், தன்னலமற்ற சமூக சேவைகளிலும் ஈடுபட்டு அனைவரும் அன்பும் அருளும் அமைதியும் ஆனந்தமும் பெற பிரார்த்திப்போமாக......

கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.

S. ஞானசுந்தரம்
அமைப்பாளர்

அஸதோ மா சத்கமய
தமசோ மா ஜோதிர்கமய
ம்ருத்யோர் மா அமிர்தம் கமய

ஓம் சாந்தி... சாந்தி .. சாந்தி ..

ஓம் சாயிராம

எல்லா மதங்களும் ஒரே இலக்கிற்கான
வெவ்வேறு பாதைகளே.

— பாபா

ஜெய் சாயிராம்

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.